செ.வெ.எண்-999 நாள்.12-11.2010

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களின் தலைமையில் இன்று (12.11.2010) மாலை 4.00 மணியளவில் தலைமைச் செயலகம், பழைய கட்டிட கூட்டரங்கில் தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றத்தின் நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த மூன்று கூட்டங்களில் ஆன்றோர் மன்ற உறுப்பினர்களால் எடுத்து வைக்கப்பட்ட கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. பின்னர், தற்போது உறுப்பினர்களால் எழுப்பப்பட்டுள்ள பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. பின்னர் உறுப்பினர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து தொடர் நடவடிக்கை எடுத்து அதன் விவரங்களை உடனே அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. பழங்குடியின மக்களுக்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ள பழங்குடியினர் நல வாரியத்தில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. (மேலும்) மாநில அரசின் நிதியாக 2009–2010 ல் ரூபாய் 214 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்வி வசதி, விடுதி வசதி, சீருடை, பரிசுத்தொகை ஆகியன வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு

வரும் பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்து பழங்குடியின மக்கள் அனைவரையும் அவ்வாரியத்தில் உறுப்பினராக்கி அவர்களுக்கு திட்ட உதவிகளை பெற்று தருமாறு அமைச்சர் அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் திரு தமிழ்ச்செல்வன், ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர், திருமதி ஆர்.ராணி, உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு பொ.சிவசங்கரன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு வ.இரவீந்திரன்,இ.வ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி மணிமேகலை,இ.ஆ.ப., மற்றும் துறையின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

12/11/10

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
கூடுதல் சிறப்பு நேர்முக உதவியாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9